**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 74 OF 2022** |
| Deposition of witness | : | **PW-1** |
| Name | : | **ஸ்ரீ சந்தோஷ்** |
| Father Name | : | **சீனிவாசன்** |
| Age | : | **28** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13.08.2025.

Accused present.

## சாட்சி மனுவியின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1. எனக்கு கடையில் திருட்டு போனது பற்றி 09.06.2022 தேதியில்தான் தகவல் சொன்னார்கள் என்றால் சரியல்ல 10ம் தேதி தான் காலை 6 -7 மணி அளவில் தகவல் சொன்னார்கள். எனது கடையிலிருந்து ஊத்துக்குளி காவல் நிலையம் சுமார் 2.5 கிலோமீட்டர் என்றால் சரிதான். எனது கடையிலிருந்து ஊத்துக்குளி காவல் நிலையத்தை அதிகபட்சமாக 10 நிமிடத்தில் அடைந்து விடலாம் என்றால் சரிதான். எனது கடையில் திருட்டு போனதாக தெரிந்த உடனே காவல் நிலையத்திற்கோ அல்லது 100 கோ தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. எனக்கு திருட்டு பற்றி தகவல் சொன்ன பேக்கரி கடைக்காரரும் போலீசாருக்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தான் அந்த கடையின் உரிமையாளர் என்று காட்டுவதற்கு எந்த ஒரு ஆவணத்தையும் புகாருடன் இணைத்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்த போதும் அவ்வாறு எந்த ஒரு ஆவணத்தையும் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது கடையில் களவு போனதாக சொல்லப்படும் பொருட்களின் பில் மற்றும் அது சம்பந்தமான வேறு எந்த ஆவணத்தையும் நான் போலீசில் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3. அவ்வாறு களவுப் போன பொருட்களின் தனிப்பட்ட குறியீடுகள் ஆன சீரியல் நம்பர், IMEI நம்பர் முதலியவற்றை நான் புகாரிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையின் போது பொருட்களை அடையாளம் காட்டும் போதும் கூட அவற்றின் தனித்துவத்தை குறிப்பிட்டு அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். நான் புகாரிலோ முதல் விசாரணை இல்லை எனது கடையில் என்னென்ன பொருட்கள் இருந்தது  என்பதை முழுமையாக தெளிவாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கடை ஜெராக்ஸ் மிஷின் பற்றிய விவரங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.4. நான் அருகாமையில் இருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை பார்வையிட்டவரையில் எனது கடையில் திருட்டு போனதாக எந்த ஒரு பதிவும் இல்லை என்றால்  சரிதான். நான் சொன்ன விதத்தில் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் எனது கடையில் அவ்வாறு திருட்டு போயிருந்தால் அதற்கான ஆவணங்களை போலீசாரிடம் கொடுத்து இருப்பேன் என்றாலும், அந்த கடை என்னுடைய கடை அல்ல என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.08.13 17:44:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 74 OF 2022** |
| Deposition of witness | : | **PW-2** |
| Name | : | **அஜித் குமார்** |
| Father Name | : | **குப்புசாமி** |
| Age | : | **27** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13.08.2025.

Accused present.

## சாட்சி மனுவியின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1. நானும் செல்வமும் முரட்டுபாளையத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்பதையோ, அந்த வாகனத்தின் பதிவு எண்ணையோ போலீசில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் நாங்கள் அங்கு சென்ற போது எந்த வாகனத்தை நிறுத்தி இருந்தார்கள் என்பதைப் பற்றி அதன் பதிவு எண்ணை அல்லது வாகனத்தின் பெயரை குறிப்பிட்டு போலீசாரிடமோ அல்லது எனது முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையிலோ அல்லது போலீஸ் விசாரணையிலோ எதிரியை விசாரித்துக் கொண்டிருந்த போலீசாரின் பதவி நிலையையோ பெயரையோ குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2. நான் அந்த இடத்திற்கு சென்றபோது அந்த வாகனம் எந்த திசையை பார்த்தவாறு நின்று கொண்டிருந்தது என்பதை எனது முதல் விசாரணையிலோ அல்லது போலீசாரின் விசாரணையின் போது சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அதேபோல் நான் சென்று பார்த்தபோது அந்த வாகனத்தில் யார் யார் இருந்தனர் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. அந்த வாகனத்தின் சாவியை எந்த போலீசார் வைத்திருந்தார் என்பதை எனது முதல் விசாரணையிலோ அல்லது போலீசாரின் விசாரணையின் போது சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, அந்த சாவியை காவல் உதவி ஆய்வாளர் வைத்திருந்தார். கைப்பற்றப்பட்ட கம்ப்யூட்டர் பொருட்களின் சீரியல் நம்பர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலும் அந்த பொருட்களின் சீரியல் நம்பர் மற்றும் தனித்துவ அடையாள எண்களை குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். அந்த காரின் டிக்கியை காவல் உதவி ஆய்வாளர் தான் திறந்து காண்பித்தார் என்றால் ஆமாம்.

4. நான் அந்த இடத்திற்கு செல்வதற்கு எவ்வளவு நேரம் முன்னதாக போலீசார் அந்த காரையோ எதிரியையோ பிடித்தனர் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் நான் சொல்லும் விதத்தில் எதிரியை பிடித்து விசாரிக்கவில்லை என்றாலும், எனது முன்னிலையில் போலீசார் எந்த ஒரு பொருளையும் கைப்பற்றவில்லை என்றாலும் அதனால் தான் எனது சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.08.13 17:44:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 74 OF 2022** |
| Deposition of witness | : | **PW-3** |
| Name | : | **விஸ்வநாதன்** |
| Father Name | : | **கருப்பசாமி** |
| Age | : | **49** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13.08.2025.

Accused present.

<u>சாட்சி மனுவியின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>

1. போலீசார் என்னை விசாரித்த போது எனது அடையாள அட்டை எதுவும் வாங்கி பார்க்கவில்லை என்றால் சரிதான். அந்த இடத்தின் அருகே எனது தோட்டம் இருந்தது என்று காட்டுவதற்கு எந்த ஒரு ஆவணத்தையும் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை சாட்சியாக இருக்கும் படி கேட்டதால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B
DHARANEETHER

Digitally signed by B
DHARANEETHER
Date: 2025.08.13 17:44:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.